போடப்படுகிற முதல் விரயமாகிறது என்ற கருத்துக் கொள்ளாமல், தொடர்ந்து இம்மாதிரி நல்ல வெளியீடுகள் வருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு இம்மாதிரி நூல்கள் 1,000 பிரதிகள்தான் போடப்பட்டன. இப்பொழுது 2,000 பிரதிகள் போடுவது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

Tenants of Sundaraperumal Koil

* 186 *Q.*—SRI K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any representation has been sent to Government on 21st February 1966 against their mirasdas, by tenants of Sundaraperumal Koil, Kumbakonam taluk, Thanjavur district, to the effect that they are unlawfully compelled to leave the Inam lands; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Only an unsigned petition was received from the villagers of Sundaraperumal Koil village stating that they are not able to apply for ryotwari patta for the lands cultivated by them for the reason that the village officers and the Revenue Inspector are being influenced by the inamdar.

(*b*) The petition was forwarded to the Assistant Settlement Officer, Thanjavur. It is reported that statutory enquiry for grant of patta in respect of Sundaraperumal Koil Vadapathi Padugai inam estate taken over by the Government will be taken up by the Assistant Settlement Officer after the survey records are received and that the representations of the villagers will be considered by him at the time of statutory enquiry either on application or suo moto as provided for under the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).

திரு. கி. இரா. சம்பந்தம் : அங்கே அந்த மிராசுதார் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் தலைவராக இருப்பதன் காரணமாக சாகுபடி செய்யக்கூடியவர்களை சாகுபடி கூட செய்ய முடியாமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அது பற்றி அமைச்சர் அவர்களுக்கும், ஜில்லா அதிகாரிகளுக்கும் மனுக்கள் கொடுக்கப்பட்டன. இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை பற்றி தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : பட்டா வழங்குவது சம்பந்தமான கேள்வி இது . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினருடைய கேள்வி என்ன வென்று சொல்லவேண்டும். மொத்தமாக, "பெட்டிஷன் வந்திருக்கிறது, அதைப்பற்றி அமைச்சர் என்ன சொல்கிறார்கள்?" என்று கேட்கக்கூடாது. கேள்வியைக் குறிப்பாகவும், தெளிவாகவும் போடவேண்டும்.

6th August 1966]

திரு. கி. இரா. சம்பந்தம் : அந்த விவசாயிகள் சாகுபடி செய்ய முடியாதபடி, வாழை போட முடியாதபடி, கரும்பை அங்கே சாகுபடி செய்ய முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அந்த பெட்டிஷனில் எழுதப்பட்டிருக்கிறது. அதுபற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் ?

கனம் திரு. வெ. ராமையா : எனக்கு வந்திருக்கக்கூடிய முக்கியமான கேள்வி பட்டா வழங்குவது சம்பந்தமானது. அதைப் பரிசீலனை செய்து பார்த்து பதில் சொல்லியிருக்கிறேன். இதிலே யாரும் குறுக்கே நிற்க முடியாது. விவசாயிகள் பட்டாவுக்கு மனுக்கள் போட்டால், சட்டத்தின் அடிப்படையில் பட்டா வழங்கு வதற்கு வேண்டிய என்கொயரி நடக்கும் என்று சொல்லியிருக் கிறேன். மற்றபடி தனியாகக் கேள்வி போட்டால், பார்த்துச் சொல்கிறேன்.

ஆலங்குடியில் அரிசி ஆலை

* 187 **கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடியில் புதிதாகக் கட்டவிருக்கும் அரசாங்க மருத்துவமனைக் கட்டடத்திற்கு மிக அருகில் ரைஸ் மில் போடு வதைத் தடை செய்ய வேண்டுமென்று அண்மையில் பொதுமக்க ளிடமிருந்து மகஜர் ஒன்று வந்ததா ?

(இ) ஆமெனில், அதற்குமேல் எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The matter is under consideration in consultation with the District Revenue Officer, Tiruchirappalli.

திரு. பி. முருகையன் : அந்த மருத்துவமனைக்கு அருகாமையில் ரைஸ் மில் ஏற்பட்டால், அங்கிருக்கிற நோயாளிகளுக்கும், வேலை செய்கிறவர்களுக்கும் இடைஞ்சல் ஏற்படும் என்று மாவட்ட மருத்துவ அதிகாரியும், மற்ற மாவட்ட தலைமை அதிகாரிகளும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதை ஒட்டி அங்கே ரைஸ் மில் வைப்பதற்கு அனுமதி கொடுக்காமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : ஒரு குறிப்பிட்ட ரைஸ் மில்லுக்கு எங்கேனும் லைசென்ஸ் வழங்கவேண்டும் என்றால் அதுபற்றி பல அதிகாரிகள் பரிசீலனை செய்து சிபார்சு செய்யவேண்டும். அது நடந்துகொண்டிருக்கிறபொழுது இதுபோன்ற ஆட்சேபணை மனு வந்திருக்கிறது. இதையும் டி.ஆர்.ஓ. பரிசீலனை செய்துகொண் டிருக்கிறார்கள்.